**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**
**CC No.569 /2025**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw3/ Pw2 |
| Name | : Sankar |
| Father/Husband's Name | : Kamalanadhan |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.03.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது சென்னை பெருநகர மத்திய குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.09.2022 அன்று பகல் 13.30 மணியளவில் செங்கல்பட்டு தாலுக்கா காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, எனக்கு கிடைத்த ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், நான் மற்றும் என்னுடன் கங்காதரன் முதல் நிலை காவலர் 356, சதீஷ்குமார் காவலர் 204 ஆகியோர்களுடன் ஒழலூர் கிராம மலையடிவாரத்தில் உள்ள பொது கழிப்பிடம் அருகே பகல் 14.00 மணியளவில் ரோந்து பணியிலிருந்தபோது, அருகிருந்த ரகசிய தகவலாளி அடையாளம் காட்ட, எதிரியை விசாரித்தபோது, அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னதால், அவரை சோதனை செய்ய போவதாக சொல்லி மேற்படி, எதிரியிடம் நான் உன்2ன சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், அவரை சோதனை செய்த போது, அவர் பாக்கெட்டில் 50 கிராம் கஞ்சா வைத்திருந்தார். பொது மக்கள் சாட்சிகள் யாரும் அங்கு இல்லாததால், அதை நான்

மேற்சொன்ன  கங்காதரன் மற்றும் சதீஷ்குமார் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு எதிரியை கைது செய்து, கைப்பற்றப்பட்ட பொருள் மற்றும் எதிரியுடன் நிலையம் சேர்ந்து, எதிரி மீது நிலைய குற்ற எண்.458/2022 8(c),20(b)(ii)(A) NDPS act ன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், எதிரியை உரிய பாராவசம் ஒப்படைத்து, இருநபர் ஜாமீனில் விடுவித்தேன்.  வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த படிவம் 91 **அதசா.ஆ4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த 50 கிராம் கஞ்சா **சா.பொ.1**  ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கில் எனது புலன் விசாரணையை முடித்து, மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

ரகசிய தகவலாளி முலம் தகவல் வந்தவுடன் எழுத்து பூர்வமாக எனது உயர் அதிகாரிக்கு தகவல் தெரிவித்தேனா என்றால் வாய்மொழி மூலமாக தகவல் தெரிவித்தேன். எழுத்து பூர்வமாக ரோந்து பணிக்கு செல்வதற்கு உயர் அதிகாரி எனக்கு உத்தரவு கொடுத்தாரா என்றால் இல்லை. எதிரியிடம் சோதனை செய்வதற்கு முன்பு சோதனை விதிமுறைகளை பற்றி சொன்னேனா என்றால் சொன்னேன்.  அதை எழுத்து பூர்வமாக செய்வதற்கு அவசியம் ஏற்படவில்லை. எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்யவில்லை என்றாலும் சரிதான்.  கைப்பற்றப்பட்ட பொருள் கஞ்சா என்பதை உறுதி செய்வதற்கு ரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. பொதுவாக முதல் தகவல் அறிக்கை தயார் செய்யும் போது தான் கு.எண். ஒத்துக்கப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கில் கு.எண்.11.09.2022 பகல் 3 மணியளவில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் முன்னதாகவே கு.எண். குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்பு கைப்பற்றுதல் மகசரில் கு.எண். குறிப்பிடப்பட்டுள்ளது. கைது அறிக்கை தயார் செய்யவில்லை. கு.எண்.388/2022 அதில் ஆஜர் எதிரி தான் குற்றவாளி அதனால் எனக்கு ஆஜர் எதிரியை தெரியும்

என்றால் அதை பற்றி ஞாபகமில்லை. எனக்கு ஏற்கனவே ஆஜர் எதிரியை தெரியும் என்பதாலும், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எந்த தகவலும் வரவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் நான் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

sd/- S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu